The Hindu (English)

Dated: 10.07.2024

# All arrangements in place for Vikravandi byelection today

**The Hindu Bureau**
VILLUPURAM

Elaborate security arrangements have been put in place at the 276 polling booths, including the 44 vulnerable and critical booths, for the smooth conduct of the byelection to the Vikravandi Assembly constituency, to be held on July 10.

Polling will start at 7 a.m. and end at 6 p.m. A total of 2,37,031 electors are eligible to exercise their franchise and 29 candidates are in the fray. Prominent among them are, Anniyur Siva of the DMK, C. Anbumani of the PMK and Abinaya Ponnivalavan of Naam Tamilar Katchi.

A total of 552 ballot units, 276 control units and 276 voter verifiable paper audit trials will be kept ready at the booths where mock polling will be held from 5.30 a.m. on Wednesday. While 1,355 officials will be on duty, 53 micro-observers will monitor the polling in 44 vulnerable and critical booths.

After polling, the EVMs will be taken to the counting centre at Government Higher Secondary School at Panayapuram near Villupuram and kept in the strong rooms. Counting of votes will take place on Saturday. A three-tier security ring will be in place.


Deccan Chronicle, Dated: 10.07.2024

# All set for Vikravandi Assembly bypoll today

DC CORRESPONDENT
CHENNAI, JULY 9

**POLLING WILL START** at 7 am and will close at 6 pm.

- A total of 2,37,031 voters can cast their votes



- There are 276 polling centres with 662 ballot units.
- The EC has identified 45 booths as vulnerable.

The eerie silence that gripped Vikravandi Assembly constituency in Villupuram district on Tuesday after 20 days of hustle and bustle was a harbinger to the people preparing to cast their votes on Wednesday to elect their representative from among the 29 candidates in the fray.

DMK's Anniyur Siva, PMK's C. Anbumani and NTK's Abinaya are the three main candidates for whom votes were solicited by a wide range of party leaders, functionaries and star campaigners throughout the campaign period making it an interesting election though the results could be inconsequential to all the three parties.

Election officials have started their work setting up the booths – there will be 276 polling centres with 662 ballot units, 330 control units and 357 VVPAT units – and making arrangements for the polling to start at 7 am. Polling will come to a close at 6 pm.

Among the total electorate of 2,37,031 voters, there are 1,20,040 women, 1,16,962 men and 29 transgender persons.

The EC has identified 45 booths as vulnerable. A holiday has been declared for offices and other institutions in the constituency.

The Times Of India
Dated: 10.07.2024

## Vikravandi bypoll today, results on July 13

Bypoll for the Vikravandi assembly constituency will be held on Wednesday. Though 29 candidates are in the fray, the real fight is between DMK and PMK. The bypoll is seen as a test for the ruling party after the Kallakurichi hooch tragedy. The results will be declared on July 13.

Dt-Next
Dated: 10.07.2024


## Assembly bypolls in seven states: Polling to be conducted for 13 seats today

**NEW DELHI:** Bypolls to 13 assembly constituencies in seven states will be held on Wednesday. The electoral exercise, the first since the Lok Sabha elections, will decide the fate of many veterans and some debutantes including Himachal Pradesh Chief Minister Sukhvinder Singh Sukhu's wife Kamlesh Thakur. The assembly seats going to polls are Raiganj, Ranaghat Dakshin, Bagda and Maniktala (West Bengal); Badrinath and Manglaur (Uttarakhand); Jalandhar West (Punjab); Dehra, Hamirpur and Nalagarh (Himachal Pradesh); Rupauli (Bihar); Vikravandi (Tamil Nadu) and Amarwara (Madhya Pradesh). The bypolls are to be held against vacancies created either due to deaths or resignations. In West Bengal, the stakes are high for both the ruling TMC, which is looking to capitalise on its improved performance in the LS polls, and the BJP, which is seeking to leverage its position.

The Hindu (Tamil)
Dated: 10.07.2024

# விக்கிரவாண்டியில் வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்குகிறது

## 276 மையங்களில் 2.37 லட்சம் பேர் வாக்களிக்க ஏற்பாடு



விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் நேற்று வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

● விழுப்புரம்

விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது. வாக்குப்பதிவு காலை 7 மணிக்கு தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இத்தேர்தலில் வாக்களிக்க 2.37 லட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர். பாதுகாப்பு பணியில் 216 மத்திய பாதுகாப்பு படையினர், 2,800 போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

விக்கிரவாண்டி திமுக எம்எல்ஏ புகழேந்தி கடந்த ஏப்ரல் 6-ம் தேதி காலமானார். இதைத் தொடர்ந்து, இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. கடந்த ஜூன் 14-ம் தேதி முதல் 21-ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் நடந்தது. 24-ம் தேதி மனுக்கள் மீதான பரிசீலனை நடந்து, 26-ம் தேதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது.

அதிமுக போட்டியிடவில்லை என்று அறிவித்துள்ள நிலையில், திமுக சார்பில் அன்னியூர் சிவா, தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாமக சார்பில் சி.அன்புமணி, நாம் தமிழர் கட்சி சார்பில் அபிநயா உள்ளிட்ட 11 கட்சிகளின் வேட்பாளர்கள், 18 சுயேச்சை வேட்பாளர்கள் என 29 பேர் தேர்தல் களத்தில் உள்ளனர்.

கடந்த 15 நாட்களுக்கும் மேலாக இத்தொகுதியில் நடந்த பிரச்சாரம் கடந்த 8-ம் தேதி மாலை 6 மணியுடன் முடிந்தது.

### 2.37 லட்சம் வாக்காளர்கள்

இந்நிலையில், இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கி, மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதையொட்டி, 276 வாக்குப்பதிவு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தேர்தலில் 1,16,962 ஆண்கள், 1,20,040 பெண்கள், 29 மூன்றாம் பாலினத்தவர் என மொத்தம் 2,37,031 பேர் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். 42 மையங்கள் பதற்றமானதாகவும், 3 மையங்கள் மிக பதற்றமானதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. அனைத்து வாக்குப்பதிவு மையங்களும் வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

552 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 276 கட்டுப்பாட்டு கருவிகள், வாக்களித்ததை சரி பார்க்கும் 276 விவிபாட் கருவிகள் உள்ளிட்டவை விக்கிரவாண்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து நேற்று காலை போலீஸ் பாதுகாப்புடன், அந்தந்த வாக்குப்பதிவு மையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

### 1,355 அலுவலர்கள்

வி.சாலை கிராமத்தில் மாதிரி வாக்குச்சாவடியும், நேமூர் கிராமத்தில் முழுவதும் பெண் ஊழியர்களே செயல்படுத்தும் 'பிங்க்' வாக்குச்சாவடியும் அமைக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு பணியில் 216 மத்திய பாதுகாப்பு படையினர், 2,800 போலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்கு பதிவு மையங்களில் 1,355 அலுவலர்கள் பணியில் உள்ளனர்.

### தேர்தல் அதிகாரி ஆலோசனை

முன்னதாக, இடைத்தேர்தல் ஏற்பாடுகள் குறித்து விழுப்புரம் மாவட்ட ஆட்சியர், காவல் துறை அதிகாரிகளுடன் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு நேற்று ஆலோசனை நடத்தினார்.

பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர், "276 வாக்குச்சாவடிகளின் நிகழ்வுகள் முழுவதும் 'வெப் காஸ்டிங்' செய்யப்படுகிறது. இதன்மூலம் அனைத்துநிகழ்வுகளும் சென்னையில் இருந்து தொடர்ந்து கண்காணிக்கப்படும். 3 கம்பெனி துணை ராணுவ படையினரை தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ளது. இதில் ஒரு கம்பெனியினர், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் ஜூலை 13-ம் தேதி வரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுவார்கள்" என்றார்.

Polling starts at 7am in Vikravandi AC 2.37 lakh people are set to vote in 276 centers

The Hindu (Tamil)

Dated: 10.07.2024

### என்டிஏ-இண்டியா கூட்டணி மீண்டும் மோதல்

# 7 மாநிலங்களில் 13 தொகுதிகளில் இன்று இடைத்தேர்தல்

● புதுடெல்லி

பாஜக தலைமையிலான என்டிஏ கூட்டணிக்கும், எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கும் இடையே மீண்டுமொரு பலப்பரீட்சை இன்று நடைபெறுகிறது. தமிழகம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் உள்ள 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இந்த தேர்தலில் அவ்விரு கூட்டணிகளும் போட்டியிட்டு தங்களது பலத்தை நிரூபிப்பதற்கு தீவிர தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டன. இதற்கு எந்த கூட்டணிக்கு அதிக பலன் கிடைத்து என்பது ஜுலை 13-ம் தேதி நடைபெறும் வாக்கு எண்ணிக்கையின் போது தெளிவாக தெரிந்துவிடும்.

மேற்கு வங்கத்தில் ராய்கஞ்ச், ரணகாட் தக்சின் (எஸ்சி), பாக்தா (எஸ்சி), மணிக்தலா ஆகிய நான்கு சட்டப்பேரவை தொகுதிகள் இடைத்தேர்தலை சந்திக்கின்றன.

அதேபோன்று, பிஹாரில் ரூபாலி, பஞ்சாபில் ஜலந்தர் மேற்கு, இமாச்சல பிரதேசத்தில் டேஹ்ரா, ஹமிர்பூர், நலகார்க், உத்தராகண்டில் பத்ரிநாத், மங்களூரு, மத்திய பிரதேசத்தில் அமர்வாரா, தமிழகத்தில் விக்கிரவாண்டி தொகுதிக்கும் இடைத்தேர்தல் இன்று நடைபெறுகிறது.

வேட்பாளர் மரணம் அல்லது பதவியை ராஜினாமா செய்தது போன்ற காரணங்களால் ஏற்பட்ட காலியிடங்களுக்கு இடைத்தேர்தல் நடத்தப்படுகிறது.

மேற்கு வங்கத்தில் இடைத்தேர்தல் நடைபெறுகிற நான்கு தொகுதிகளில் 3 தொகுதிகளை கடந்த 2021 தேர்தலில் பாஜக கைப்பற்றியிருந்தது.

பிஹாரில் ராஷ்டிரிய ஜனதா தளம் மற்றும் ஐக்கிய ஜனதா தளம் கட்சிகளுக்கு இடையே கடும் போட்டி நிலவுகிறது. பெரும்பான்மையான கங்கோடா சமூகத்தை சேர்ந்த வேட்பாளர்களை இவ்விரு கட்சிகளும் நிறுத்தியுள்ளன.

முஸ்லிம்கள் பெரும்பான்மையாக உள்ள மங்களூரில், காங்கிரஸ் கட்சி காசி நிஜாமுதீனை நிறுத்தியுள்ளது, அவர் மூன்று முறை இத்தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். உத்தராகண்ட் உருவாக்கப்பட்டதில் இருந்து மங்களூர் தொகுதியில் பாஜக இதுவரை வெற்றி பெற்றதில்லை. அக்கட்சி கர்தார் சிங் பதானாவை களமிறக்கியுள்ளது.

By-election starts in 13 constituencies in 7 states

Daily Thanthi

Dated: 10-07-2024

விக்கிரவாண்டியில் இன்று வாக்குப்பதிவு:

# 276 வாக்குச்சாவடிகளும் இணைய வழியில் கண்காணிப்பு

## தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

சென்னை, ஜூலை.10-

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதியில் இடைத் தேர்தல் வாக்குப்பதிவு இன்று (புதன்கிழமை) நடைபெறுகிறது. அங்கு வாக்குப்பதிவிற்காக 276 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இடைத்தேர்தல் ஏற்பாடுகள் குறித்து விழுப்புரம் மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் காணொலி வழியாக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தலைமைச்செயலகத்தில் இருந்தபடி நேற்று ஆலோசித்தார்.

பின்னர் பத்திரிகையாளர்களுக்கு சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

விக்கிரவாண்டி தொகுதியில் இடைத்தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. தேர்தலுக்காக அமைக்கப்பட்டுள்ள 276 வாக்குச்சாவடிகளிலும் கண்காணிப்பு கேமராக்கள் அனைத்தும் இணையவழியில் இணைக்கப்பட்டுள்ளன.

அந்த கேமராக்கள் மூலமாக காட்சிகளை பார்வையிட்டு, வாக்குப்பதிவு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக தலைமைச் செயலகத்தில் பிரத்யேகமாக கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. அந்த அறையில் இருந்து இடைத்தேர்தல் வாக்குப்பதிவை கண்காணிக்க முடியும். இந்த தேர்தலுக்காக 3 கம்பெனி துணை ராணுவப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நிறைவடைந்ததும், வாக்கு எண்ணிக்கை பாதுகாப்பிற்காக ஒரு கம்பெனி துணை ராணுவத்தினர் நிறுத்தி வைக்கப்படுவார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

CEO informs that polling starts at 7am in Vikravandi AC

CCTV camera surveillance in 276 Booths.

Daily Thanthi, Dated: 10.07.2024

### விக்கிரவாண்டி தொகுதியில் இன்று இடைத்தேர்தல்

# காலை 7 மணிக்கு ஓட்டுப்பதிவு தொடங்குகிறது

## பதற்றமான பகுதிகளில் துணை ராணுவப்படை பாதுகாப்பு

விக்கிரவாண்டி, ஜூலை.10-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் இன்று காலை 7 மணிக்கு ஓட்டுப்பதிவு தொடங்குகிறது. தேர்தலை அமைதியாக நடத்த பதற்றமான பகுதிகளில் துணை ராணுவப்படை பாதுகாப்பு போடப்பட்டு இருக்கிறது.

### இடைத்தேர்தல்

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தி.மு.க. சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்த நா.புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் 6-ந் தேதி மரணம் அடைந்தார். இதையடுத்து, விக்கிரவாண்டி தொகுதிக்கு இன்று (10-ந் தேதி) இடைத்தேர்தல் நடக்கிறது.

ஆளும் கட்சியான தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். அ.தி.மு.க. போட்டியில் இருந்து விலகி கொண்டதால், தி.மு.க.வுக்கு போட்டியாக பா.ம.க.வேட்பாளர் சி.அன்புமணி, நாம்தமிழர் கட்சியின் வேட்பாளர் டாக்டர் அபிநயா ஆகியோர் நிற்கிறார்கள். இவர்களுடன் சுயேச்சைகளையும் சேர்த்து மொத்தமாக 29 பேர் களத்தில் இருக்கிறார்கள்.

### வாக்குச்சாவடிகள் தயார்

அனல் பறந்த தேர்தல் பிரசாரம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில், இன்று (புதன்கிழமை) ஓட்டுப்பதிவு நடைபெறுகிறது. தேர்தலுக்காக தயார் செய்யப்பட்டுள்ள 276 வாக்குச்சாவடிகளில் 44 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டு இருக்கிறது.

தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 37 ஆயிரத்து 31 வாக்காளர்கள் இருக்கிறார்கள்.

அவர்கள் சிரமமின்றி வாக்களிக்க தேவையான அனைத்து வசதிகளும் வாக்குச்சாவடிகளில் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான சக்கர நாற்காலி, மூத்த குடிமக்களின் வசதிக்காக வாக்குச்சாவடிகளில் சாய்தள வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### தேர்தல் பணியில் 1,355 பேர்

ஓட்டுப்பதிவுக்கு தலா ஒரு வாக்குச்சாவடிக்கு 2 மின்னணு எந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொகுதி முழுவதுமாக 552 வாக்குப்பதிவு எந்திரங்கள், 276 கட்டுப்பாட்டு கருவிகள், யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதிப்படுத்தும் கருவிகள் (வி.வி.பேட்) 276-ம் பயன்படுத்தப்படுகின்றன.

தேர்தல் பணியில் அரசு அலுவலர்கள், ஊழியர்கள், ஆசிரியர்கள் என 1,355 பேர் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கு 3 கட்டங்களாக பயிற்சி அளிக்கப்பட்டது. நேற்று அவர்கள் பணிபுரிய உள்ள இடங்களை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான பழனி, கணினி மூலம் குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்தார்.

### 66 பொருட்கள்

மதியம் 2 மணிக்கு விக்கிரவாண்டி தாலுகா அலுவலகத்தில் இருந்து, வாக்குப்பதிவு எந்திரங்களை வாக்குச்சாவடி அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்து கொடுக்கப்பட்ட வேன்களில் போலீஸ் பாதுகாப்புடன் எடுத்துசென்றனர். அப்போது வாக்குச்சாவடிக்கு தேவையான 66 பொருட்கள் அடங்கிய பையையும் உடன் எடுத்து சென்றார்கள்.

இந்த வாகனங்களில் ஏற்கனவே ஜி.பி.எஸ். கருவி பொருத்தப்பட்டுள்ளதால் அந்த கருவியின் மூலமாக மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் முறையாக வாக்குச்சாவடிகளுக்கு சென்றடைந்ததா? என்பதை தேர்தல் அதிகாரிகள் கண்காணித்தனர்.

### துணை ராணுவப்படை பாதுகாப்பு

வாக்குப்பதிவு அமைதியாக நடைபெற தேர்தல் ஆணையம் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. வாக்குச்சாவடிகளில் வெப் கேமரா பொருத்தி, நுண் பார்வையாளர்கள் மூலம் கண்காணிக்கப்படுகிறது. இதுதவிர 110 வாக்குச்சாவடிகளில் வெளிப்பகுதியிலும் வெப் கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் வடக்கு மண்டல போலீஸ் ஐ.ஜி. நரேந்திரன்நாயர் மேற்பார்வையில் விழுப்புரம் சரக போலீஸ் டி.ஐ.ஜி. திஷா மித்தல், மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தீபக் சிவாச் ஆகியோர் தலைமையில் மத்திய துணை ராணுவப்படையினர் 220 பேர் உள்பட 2,651 போலீசார் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### காலை 7 மணிக்கு தொடங்குகிறது

வாக்குப்பதிவுக்கு முன்பாக வாக்குப்பதிவு எந்திரங்களின் செயல்பாட்டை உறுதி செய்திட வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் அதிகாலை 5.30 மணியில் இருந்து காலை 6.30 மணி வரை மாதிரி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. தொடர்ந்து இன்று காலை 7 மணிக்கு ஓட்டுப்பதிவு தொடங்கி மாலை 6 மணிக்கு நிறைவடைகிறது.

அதன்பின் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சீல் வைக்கப்பட்டு, போலீஸ் பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையமான பனையபுரத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளிக்கு கொண்டு செல்லப்படுகிறது. அங்குள்ள அறையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு 13-ந் தேதி (சனிக்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளது.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரியும் கலெக்டருமான பழனி கூறுகையில், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை அமைதியான முறையில் நடத்துவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன.

வாக்காளர் அனைவரும் வாக்குச்சாவடிகளுக்கு வந்து ஓட்டளிக்கும்படி வேண்டுகோள் விடுத்து இருக்கிறார்.



பதற்றமான வாக்குச்சாவடி என்று கண்டறியப்பட்ட விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் துணை ராணுவத்தினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த காட்சி.

Polling starts at 7am in Vikravandi A.C paramilitary Bandobast at Vulnerable Booths.

Daily Thanthi
Dated: 10.07.2024

6 மாநிலங்களில்

# 12 சட்டமன்ற தொகுதிகளுக்கு இன்று இடைத்தேர்தல்

புதுடெல்லி, ஜூலை.10-
விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தி.மு.க. சட்டமன்ற தொகுதி உறுப்பினராக இருந்த நா.புகழேந்தி கடந்த ஏப்ரல் மாதம் மரணம் அடைந்ததையடுத்து, விக்கிரவாண்டி தொகுதிக்கு இன்று (புதன்கிழமை) இடைத்தேர்தல் நடக்கிறது. இதே போல மேற்குவங்காளத்தில் உள்ள ராய்கஞ்ச், ரனாகாட் தக்சின், பாக்தா மற்றும் மணிக்தலா ஆகிய 4 தொகுதிகள், மத்திய பிரதேசத்தில் அமர்வாரா, பீகாரில் ரூபாலி, உத்தரகாண்டில் உள்ள பத்ரிநாத் மற்றும் மங்களூர், பஞ்சாபில் ஜலந்தர் மேற்கு, இமாசல பிரதேசத்தில் டேஹ்ரா, ஹமிர்பூர் மற்றும் நலகர் ஆகிய தொகுதிகளிலும் வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

By-election starts in 12 constituencies in 6 states

Dinamalar

Dated: 10.07.2024

# விக்கிரவாண்டியில் இன்று ஓட்டுப்பதிவு

**சென்னை, ஜூலை 10–**

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தலில், இன்று ஓட்டுப்பதிவு நடக்க உள்ளது. காலை 7:00 மணிக்கு துவங்கும் ஓட்டுப்பதிவு, மாலை 6:00 மணிக்கு நிறைவு பெறும்.

தேர்தல் அமைதியாக நடக்க, தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழக போலீசாருடன், மூன்று கம்பெனி துணை ராணுவத்தினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர்.

விக்கிரவாண்டி தொகுதியில், 276 ஓட்டுச்சாவடிகள் உள்ளன. அனைத்து ஓட்டுச்சாவடிகளிலும் ஓட்டுப்பதிவு நடப்பதை, தமிழகதலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரி, தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகியோர் தங்கள் அலுவலகத்தில் இருந்து கண்காணிக்க, 'வெப் கேமரா'க்கள் பொருத்தப்பட்டு உள்ளன.

வீடியோ பதிவு செய்யவும், தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்துள்ளது. ஓட்டு எண்ணிக்கை, வரும், 13ம் தேதி நடக்கிறது.

அதுவரை ஓட்டு இயந்திரங்கள் வைக்கப்படும் அறைக்கு, துணை ராணுவ பாதுகாப்பு அளிக்கப்படும் என, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரதா சாஹூ தெரிவித்துள்ளார்.

Polling Starts at 7am in vikravandi A.c